செ.கு. எண்: 49.  நாள்: 03/02/2012.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 3.2.2012

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல்சோழங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னப்பையன் என்பவரின் மகன் திரு. ஆறுமுகம் 1.2.2012 அன்று காட்டு யானை தாக்கியதில், அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானை தாக்கியதில் அகால மரணமடைந்த ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான ஆறுமுகத்தை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு வனத் துறை மூலம் மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

*வெளியீடு, இயக்குநர்*
*செய்தி, மக்கள் தொடர்புத் துறை,*
*சென்னை-9*